# IDEA HUNT
# (ஐடியா வேட்டை)

On account of the 15th Anniversary of Thoothoor.com services, we present this excellent opportunity for our people to provide ideas to improve Thoothoor region.

**தூத்தூர்.காம் இணையதளத்தின் 15 வது ஆண்டு விழாவை முன்னிட்டு, தூத்தூர் பகுதியை நவீனமயமாக்க தேவையான திட்டங்களை தயாரித்து பரிந்துரைக்கும் ஒரு வாய்ப்பாக இந்த ஐடியா வேட்டையை தூத்தூர்.காம் நடத்துகிறது**

## Important Dates (போட்டிக்கான முக்கிய நாட்கள்)

| | |
|---|---|
| Last Date for Registration (பெயர்களை பதிவு செய்ய கடைசி நாள்) | 28-02-2017 |
| Last Date for sending Idea (ஐடியா அனுப்ப கடைசி நாள்) | 20-03-2017 |
| Result Announcement (போட்டி முடிவுகள் வெளியிடும் நாள்) | 01-04-2017 |
| Reward Distribution (பரிசுகள் வழங்கும் நாள்) | 16-04-2017 |

## About the Idea Hunt
## (ஐடியா வேட்டை பற்றிய விபரங்கள்)

| | |
|---|---|
| Theme (கருத்து) | Advancing Thoothoor Region<br>**தூத்தூர் பகுதியை நவீனமயமாக்கல்** |
| Languages (மொழி) | Tamil, Malayalam, English (தமிழ், மலையாளம், ஆங்கிலம்) |
| Content Limit (பக்க அளவு) | There is no limit for the number of pages or words<br>(எத்தனை பக்கங்கள் அல்லது வார்த்தைகள் என்று கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை) |
| Rules (விதிமுறைகள்) | • A single person or a team of people can together submit idea. (தனி நபராகவோ அல்லது ஒரு குழுவாக இணைந்தோ ஐடியா அனுப்பலாம்)<br>• Idea should be original and focus any Topic that is associated with the given theme. (ஐடியா சொந்த யோசனையாகவும் , கொடுக்கப்பட்டிருக்கும் கருத்திற்கு உகந்த எதாவது ஒரு விஷயத்தை பற்றியதாக இருக்க வேண்டும்)<br>• One can submit any number of ideas in any number of Topics (ஒருவர் எத்தனை ஐடியாக்களை வேண்டுமானாலும் எத்தனை விஷயங்களில் வேண்டுமானாலும் அனுப்பலாம்) |
| Who can Participate (பங்குபெற தகுதி) | Anybody from anywhere who is interested<br>(விருப்பமுள்ள எவரும் கலந்து கொள்ளலாம்) |

| Some Suggestions<br>(சில யோசனைகள்) | <ul><li>One can take any Topic of their choice and propose ideas (ஒருவர் தனக்கு விருப்பப்பட்ட எந்த விஷயத்தையும் தேர்ந்தெடுத்து அதில் ஐடியா சொல்லலாம்)</li><li>Topic shall be a Vision for Future or Solution for a Problem. (தேர்ந்தெடுத்த விஷயம் ஒரு பிரச்சினை சார்ந்ததாகவோ அல்லது முன்னேற்றம் சார்ந்ததாகவோ இருக்கலாம்)</li><li>Topic can be from the field of education, fishing profession, youth, sports, healthcare, infrastructure, economy, AVM canal, extracurricular activities, new facilities, sea – offshore or onshore, preparation to face future, disaster management, parish/village, government services, private services, or any field that you can think of. We really don't want to restrict. (நம் முன் இருக்கின்ற பல விஷயங்களில் உங்களுக்கு அதிக அக்கறையுள்ளதை தேர்ந்தெடுக்கலாம். உதாரணமாக கல்வி, மீன்பிடி தொழில், இளைஞர்கள், விளையாட்டு, சுதாதாரம், கட்டமைப்பு, வர்த்தகம், ஏவிளம் ஆறு, புது சவுகரியங்கள், கடல் சார்த்த விஷயங்கள், எதிர்காலத்திற்கு திட்டமிடல், பங்கு/ஊர், அரசு சேவைகள், தனியார் சேவைகள், மற்றும் உங்களால் ஊகிக்க முடியும் எந்த விஷயமானாலும் அனைத்தும் ஏற்று கொள்ளப்படும்)</li></ul> |
|---|---|

# How to Participate

## (வேட்டையில் எப்படி கலந்து கொள்வது)

| Step 1<br>(படி 1) | Register your Name before 28-02-2017 using any of the below method:<br>(பெயரை 28-02-2017 முன்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள எதாவது ஒரு முறையில் பதிவு செய்யுங்கள்:)<ul><li>Contact any of the Admin of [www.thoothoor.com](www.thoothoor.com)<br>(தூத்தூர்.காம் அட்மின்-களில் ஒருவரை தொடர்பு கொள்ளலாம்)</li><li>Send email to **admin@thoothoor.com**<br>(**admin@thoothoor.com** க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்)</li><li>Contact **9845147058** by phone call or WhatsApp<br>(**9845147058 என்ற எண்ணை தொடர்புகொள்ளலாம்)**</li></ul> |
|---|---|
| Step 2<br>(படி 2) | Decide the Topic in which you want to propose ideas<br>(நீங்கள் ஐடியா கொடுக்க விரும்பும் விஷயத்தை முடிவு செய்யவும்) |
| Step 3<br>(படி 3) | Collect enough details, evaluate, discuss with other people, and build confidence to propose ideas.<br>(தேர்ந்தெடுத்த விஷயத்தை பற்றி தேவையான அளவு தகவல்களை திரட்டி, பிறருடன் விவாதித்து, நம்பிக்கையை வளர்த்து கொள்ளவும்) |

| | |
|---|---|
| Step 4<br>(படி 4) | Write down the idea in the following format, you can also make required changes to this format. (ஐடியாவை கீழ்கண்ட விதத்தில் எழுதலாம். விரும்பினால் தேவையான மாற்றங்களை செய்யலாம்)<br>• Idea Title (ஐடியா தலைப்பு)<br>• Topic/Problem (ஐடியாவில் சொல்லப்போகும் விஷயம்)<br>• Idea Goal (ஐடியா நோக்கம்)<br>• Idea Statement (ஐடியா விபரம்)<br>• Idea Execution Strategy (ஐடியா செயல்படுத்தும் விதம்)<br>• Challenges in this Idea (இந்த ஐடியாவில் உள்ள சவால்கள்)<br>• Idea Conclusion (ஐடியா முடிவுரை)<br>• Idea Owner/Team details (Name, Phone, Address) (ஐடியா உரிமையாளர் விபரம் (பெயர், போன், முகவரி))<br>**[NOTE] Refer the Sample Idea given at the bottom Appendix Section**<br>**[குறிப்பு] மாதிரி ஐடியா கீழே இணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது** |
| Step 5<br>(படி 5) | Send the idea by email (**admin@thoothor.com**) or phone number (**9845147058**)<br>ஐடியாவை மின்னஞ்சல் (**admin@thoothor.com**) வழியாகவோ அல்லது போன் (**9845147058**) வழியாகவோ அனுப்பவும் |
| Step 6<br>(படி 6) | Relax and wait for the fury to evaluate and announce the result (முடிவுகள் அறிவிக்கும் வரை காத்திருக்கவும்) |

# Rewards

| | |
|---|---|
| Certificates<br>*(சான்றிதழ்)* | All shortlisted entries on the given theme will be issued the participation certificate. (போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து ஐடியாக்களுக்கும் "Participation சான்றிதழ்" வழங்கப்படும்.) |
| Trophies<br>*(கேடயம்)* | Top 5 ideas will be given the Trophy<br>சிறந்த ஐந்து ஐடியாக்களுக்கு கேடயம் வழங்கப்படும் |
| Rules of the Selection<br><br>(விதிமுறைகள்) | • We will not select a winner here as we strongly believe that every idea is important, useful, and a result of a genuine effort. வெற்றி பெற்ற ஐடியா என்று தனியாக தேர்ந்தெடுப்பதில்லை. ஏனென்றால், ஒவ்வொரு ஐடியாவையும் முக்கியமானதாகவும் மற்றும் ஒரு முயற்சியின் வெளிப்பாடாகவும் தான் காண்கிறோம். |

# FAQ

1. **Why Thoothoor.com is conducting Idea Hunt?**
   As Thoothoor.com is viewed as a platform to unite people of our region, we thought it would be good to create an opportunity for our people to share ideas in a positive spirit and motive. The “Idea Hunt” event is the result of such thought.

We also believe that the concept of "IDEA HUNT" is a maiden attempt which will evolve in coming days in various forms/platforms and will benefit our society.

2. **I like this idea of conducting this Idea Hunt, now how can I support this?**
   There are two ways by which you can support this
   - You can sponsor expense for trophies, or expense for certificates. Please contact any of the Thoothoor.com Administrators if you wish to contribute.
   - Spread the news to your known people who you think can participate effectively.

3. **I didn't register my name before 28-02-2017. Can I still submit Entries?**
   Yes, You can. In such case, please contact one of the Thoothoor.com admin and we will accept your entries.

4. **I want to know about the selection process?**
   We will use a genuine panel of intellectuals to evaluate the idea. More details on this will be updated later.

5. **I have doubts. How to get it clarified?**
   For any clarification, please call or WhatsApp **9845147058**

6. **Can I see one Sample Idea to get better understanding on writing ideas?**
   Yes you can, please refer the Appendix section below.

**[Continue to Next Page]**

# UPDATED! Appendix:
# Sample Idea (*மாதிரி ஐடியா*) for better understanding

**(மனதில் தோன்றிய ஐடியாவை எப்படி எழுத வேண்டும் என்பதை எளிதாக புரிந்து கொள்ள வேண்டி இந்த "மாதிரி ஐடியா" கொடுக்கப்பட்டுள்ளது)**

## IDEA TITLE - *ஐடியா தலைப்பு*:

***NLT நலம் விரும்பிகளுக்கு ஒரு வாய்ப்பு! NLT க்கு நிதி ஆதாரம்!!***

## TOPIC/PROBLEM - *ஐடியாவில் சொல்லப்போகும் விஷயம்*:

*வெள்ளிவிழாவை கடந்து வெற்றி நடை போடும் தூத்தூர் நேதாஜி படிப்பகம் தூத்தூர் ஊர் மக்களிடவும் தூத்தூர் பகுதியிலுள்ள அனைத்து ஊர் மக்களிடவும் நல் மதிப்பை பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் மாநில அளவில் சிறந்த புகழுடன் விளங்குகிறது என்பது நாம் அறிந்த உண்மை.*

*அனைவரின் ஒத்துழைப்புடன் கால்பந்தாட்ட விளையாட்டில் சிறப்பாக செயல்பட்டு வரும் NLT மேலும் பிற ஆக்கபூர்வமான செயல்களில் கவனம் செலுத்த முடியாமல் இருப்பதற்கு நிதி பிரச்சினை காரணமாக இருக்கிறது.*

*வெறும் நிதி பிரச்சினை NLT யின் ஆற்றல்களை விலங்கிடுவதையும் NLT யின் எல்லைகளை சுருக்குவதையும் NLT யின் நலம் விரும்பிகளான நாம் வேடிக்கை பார்ப்பது நம்மை நாமே ஏமாற்றுவதாக தான் எடுத்து கொள்ள முடியும். இந்த நிலமையை நாம் ஒன்றாக இணைந்து மாற்ற வேண்டும்..*

## IDEA GOAL - *ஐடியா நோக்கம்*:

*NLT க்கு நிதி ஆதாரம் ஒரு பிரச்சினை என்றால், மறு பக்கம் பல NLT நலம் விரும்பிகளுக்கு NLT க்கு உதவி செய்ய ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சரியான வாய்ப்பு (an organised proper channel) இல்லாத ஒரு சூழல் இருப்பதையும் நம்மால் உணர முடிகிறது.*

*ஈஸ்டர் தினத்தில் நடக்கும் ஒரு நாள் கால்பந்தாட்ட போட்டியை பெரும்பாலும் கடல் சார் தொழில் செய்பவர்களின் மற்றும் ஊரை ஒட்டி வாழ்பவர்களின் பங்களிப்புடன் நடை பெறுகிறது. இதை போல ஊருக்கு*

*வெளியே நிரந்தரமாக வாழ்ந்து வரும் NLT நலம் விரும்பிகளுக்கு NLT க்கு பண உதவி செய்வதற்கு ஒரு வாய்ப்பு உருவாக்க பட வேண்டும்.*

*இதற்கு ஒரு ஆக்கபூர்வவமான தீர்வை காண்பது தான் "NLT நலம் விரும்பிகளுக்கு ஒரு வாய்ப்பு! NLT க்கு நிதி ஆதாரம்!!" என்ற தலைப்பிலான இந்த ஐடியாவில் நோக்கம்.*

## IDEA STATEMENT - *ஐடியா விபரம்:*

*இந்த ஐடியாவில் முன்வைக்கப்படும் பரிந்துரைப்படி, NLT யில் "கோல்டன் நலம் விரும்பிகள்" என்ற ஒரு குழுவை உருவாக்கி NLT க்கு வருடம் தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து உதவ விரும்புகின்ற NLT நலம் விரும்பிகளை அந்த குழுவில் உறுப்பினர்களாக்க வேண்டும். "கோல்டன் நலம் விரும்பிகள்" குழுவில் இருப்பது ஒரு பெருமை என்ற நிலையை உருவாக்குவதன் மூலம் பலரும் தானாக முன்வந்து இந்த குழுவில் இணைகின்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.*

*"கோல்டன் நலம் விரும்பிகள்" குழு என்பது NLT யின் பல தரப்பட்ட அன்றாட செயல்பாட்டிற்கும் மற்றும் புது முயற்சிகளுக்கும் தேவையான நிதி ஆதாரத்தை உருவாக்குவதற்கான ஒரு புதிய முயற்சி மட்டுமே.*

## IDEA EXECUTION STRATEGY - *ஐடியா செயல்படுத்தும் விதம்:*

*"கோல்டன் நலம் விரும்பிகள்" என்ற குழுவை எப்படி திட்டமிடலாம் என்று சில பரிந்துரைகளை பார்க்கலாம். இந்த திட்டத்தை முதலில் அறிவிக்கும் போது இதை ஒரு அறிமுக முயற்சியாக பாவித்து தேவையான மாற்றங்களை தேவைக்கேற்ப செய்து கொள்ளும் அளவில் இதை திட்டமிடவேண்டும்.*

*"கோல்டன் நலம் விரும்பிகள்" குழு என்பது முழுக்க முழுக்க ஒரு தன்னார்வ குழுவாக கருதப்பட வேண்டும். இந்த குழுவில் யார் வேண்டுமானாலும் இணையலாம். இந்த குழுவில் உள்ளவர்கள் ஒவ்வொரு வருடவும் NLT க்கு Rs.1000/- நன்கொடையாக (சந்தா) அளிக்க வேண்டும். முதலில் உறுப்பினர்களாக இணையும் போது குறைந்த பட்சம் ஒரு வருட சந்தா தொகையை செலுத்த வேண்டும். தொடர்ந்து வரும் வருடங்களில் Dec 31 க்கு முன்பாக சந்தா செலுத்த வேண்டும்.*

*மிகவும் முக்கியமாக "NLT உறுப்பினர்கள்" என்பதையும் "கோல்டன் நலம் விரும்பிகள் குழு" என்பதையும் நாம் குழப்பி கொள்ள வேண்டாம். "NLT உறுப்பினர்கள்" என்ற அமைப்பு அப்படியே தொடர்கிறது. NLT தீர்மானங்களில் "NLT உறுப்பினர்கள்" அனைவரும் சமமாக பங்கு*

*கொள்வார்கள். "கோல்டன் நலம் விரும்பிகள்" குழுவிற்கு என்று நிர்வாக ரீதியான எந்த விதமான தனிப்பட்ட அதிகாரங்கள் இல்லை.*

*"கோல்டன் நலம் விரும்பிகள்" குழுவை ஊக்கப்படுத்த NLT சில விஷயங்களை செய்யலாம். சில பரிந்துரைகள் கீழே...*

- *ஒவ்வொரு வருடவும் "கோல்டன் நலம் விரும்பிகள்" குழுவின் புதுப்பிக்க பட்ட லிஸ்டை NLT யில் ஓட்ட வேண்டும். மேலும் [www.thoothoor.com](http://www.thoothoor.com) இணையதளத்திலும் இந்த லிஸ்டை பதிவிடலாம்.*
- *இந்த குழுவிலுள்ள மெம்பர்களுக்கு ஒரு அழகான பெருமை கொள்ளத்தக்க அடையாள சின்னம் கொடுக்க பட வேண்டும். இது அவர்களது இல்லங்களின் வரவேற்ப்பறையை அலங்கரிக்கட்டும்.*
- *இந்த குழுவிலுள்ளவர்களுக்கு என்று தனியாக ஒரு ஈமெயில் குரூப் மற்றும் வாட்ஸாப்ப் குரூப் அமைத்து, NLT நிர்வாகத்திலிருந்து அவ்வப்போது NLT செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றிய செய்திகள் அனுப்பப்பட வேண்டும்.*
- *வருடத்தில் ஒரு முறை அதிக உறுப்பினர்கள் கலந்து கொள்ள வசதியான விடுமுறை சமயத்தில் "கோல்டன் நலம் விரும்பிகள்" குழுவுக்கென ஒரு மீட்டிங் வேண்டும். இந்த மீட்டிங்கில் எடுக்க படும் பரிந்துரைகளில் NLT நிர்வாகம் அக்கறை காட்ட வேண்டும்.*

## CHALLENGES IN THIS IDEA - *இந்த ஐடியாவில் உள்ள சவால்கள்:*

*முக்கியமாக NLT நிர்வாகம் இந்த ஐடியாவை ஏற்று கொள்ள முன்வர வேண்டும். மேலும் இந்த ஐடியாவை செயல்படுத்த தேவையான மக்கள் ஆதரவு மற்றும் பங்களிப்பை உருவாக்க பல மட்டங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ள பட வேண்டும். உறுப்பினர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தெளிவு படுத்தி ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும்.*

## IDEA CONCLUSION - *ஐடியா முடிவுரை:*

*இந்த ஐடியாவை செயல்படுத்துவதன் மூலம்* NLT *பல புதுமையான உயரங்களை அடைய முடியும் என்பது உறுதி.*

## IDEA OWNER/TEAM DETAILS (Name, Phone, Address) – *ஐடியா உரிமையாளர் விபரம் (பெயர், போன், முகவரி):*

*Name, Phone Number, Place Name and Address.*